## ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமையினை வலுப்படுத்தும் செயற்திட்டத்தின் கூறு I - 2019

ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமையினை வலுப்படுத்தும் செயற்திட்டத்தின் கூறு I இன் 2019 சனவரி 23 தொடக்கம் 2019 திசெம்பர் 31 வரையான முதலாவது கணக்கீட்டுக் காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 சனவரி 23 ஆம் திகதிய 8878-எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சாகவிருந்த தற்போதைய சுகாதார அமைச்சானது செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் சுகாதார அமைச்சு முன்னாள் மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டு அமைச்சாகவிருந்த தற்போதைய அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுடன் இணைந்து செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. செயற்திட்டம் பிரதானமாக இரண்டு கூறுகளாக பிரிக்கப்பட்டுள்ளதுடன் கூறு I மத்திய மட்டம் மற்றும் மாகாண மட்டத்தில் அமுல்ப்படுத்தப்படுகின்றது. நாட்டின் தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் உயர் ஆபத்தைக் கொண்ட சனத்தொகை குழுக்களில் உள்ள தொற்றா நோய்களை கண்டறிந்து முகாமை செய்வது தொடர்பான வலியுறுத்தலுடன் கூடிய ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவைகளின் பயன்பாடு மற்றும் தரத்தினை அதிகரிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோள்கள் ஆகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 31,588 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 200 மில்லியனானதுடன் அதில் ரூபா 29,218 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 185 மில்லியன் செயற்திட்டத்தின் கூறு I இற்காக ஒதுக்கப்பட்டது. செயற்திட்டத்தின் மொத்தக் கிரயமும் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியினால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 சனவரி 23 இல் தொடங்கியிருந்ததுடன் 2023 திசெம்பர் 3 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த காலப்பகுதிக்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற

அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2019 மார்ச் 15 ஆம் திகதிய 1/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை | | | |
| | (i) 2.3.3 ஆம் பந்தி | பிரதி செயற்திட்ட பணிப்பாளர் தேவையான குறைந்தபட்சத் தகைமைகளைக் கருத்தில் கொள்ளாமல் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தார். | செயற்திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் அடிப்படையில் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் நியமனம் வழங்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுடன் இணங்க வேண்டும். |
| | (ii) 9.3 ஆம் பந்தி | மீளாய்வாண்டின் போது தேவையான செயற்திட்ட வழிகாட்டல் குழு கூட்டங்கள் நடத்தப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | செயற்திட்ட வழிகாட்டல் குழுவின் கூட்டங்கள் ஒழுங்காக நடாத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 யூன் 04 ஆம் திகதிய செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் 64 ஆம் பந்தி | மீளாய்வுக் காலப்பகுதியின் போது செயற்திட்ட நடவடிக்கைகள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில் லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2015 செப்தெம்பர் 25 ஆம் திகதிய எஸ்பி/எஸ்பீ/07/15 ஆம் இலக்க சனாதிபதி செயலக சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயலமர்வுகளை நடாத்துவதற்கு வசதியளிப்பதற்காக தனியார் துறை நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டு ரூபா 3.8 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | சுற்றறிக்கைக்கு இணங்குதல் வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்**

| | **செயற்பாடு** | **2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | | **கணக்காய்வு விடயம்** | **தாமதங்களிற்கான காரணம்** |
|---|---|---|---|---|---|
| | | **எதிர்பார்க்கப்பட்ட பௌதீகச் செயலாற்றல்** | **அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல்** | | |
| | | **அலகுகள்** | **அலகுகள்** | | |
| (அ) | ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிறுவனங்களில் 4 வகையான சேவைகளின் அடிப்படையில் வழங்கப்படும் நோயாளி நட்பு சேவைகளின் எண்ணிக்கை. | 50 | இல்லை | வருடாந்த வழங்கல் இணைப்பு குறிகாட்டி 4 (DLI - 4) இலக்குகள் மாகாண மட்டத்தில் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தாமதத்திற்கான காரணங்கள் எதுவும் வழங்கப்படவில்லை. |
| (ஆ) | காலம் முழுவதும் பரிந்துரை சங்கிலி (referral chain) மூலம் நோயாளியின் பராமரிப்பை ஒருங்கிணைப்பதற்கு தனிப்பட்ட சுகாதார பதிவுகளைப் பயன்படுத்தும் ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிறுவனங்களின் எண்ணிக்கை. | 50 | இல்லை | வருடாந்த வழங்கல் இணைப்பு குறிகாட்டி 5 (DLI - 5) இலக்குகள் மாகாண மட்டத்தில் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- |
| (இ) | மருத்துவப் பொருட்கள் முகாமைத்துவ தகவல் முறைமையுடன் இணைக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தும் ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிறுவனங்களின் எண்ணிக்கை. | 50 | இல்லை | வருடாந்த வழங்கல் இணைப்பு குறிகாட்டி 6 (DLI - 6) இலக்குகள் மாகாண மட்டத்தில் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- |

**முகாமைத்துவத்தின் பதில்** கருத்துரை வழங்கப்படவில்லை.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** வருடாந்த விநியோக இணைப்பு குறிகாட்டி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

3.2 களவிஜயங்களில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்

| இல. | தொடர்புடைய DLI | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | DLI-5 | நோயாளியின் தகவல்களைப் பதிவு செய்வதற்கு மின்னணு தரவு முறைமை பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் நோயாளியின் பதிவுத் தகவல் மாத்திரமே மின்னணு முறையில் தனிப்பட்ட கணனியில் பதிவு செய்யப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | மின்னணு தரவு முறைமை உடனடியாக அறிமுகப்படுத்தப் பட வேண்டும். |
| (ஆ) | DLI-9 | மத்திய மாகாணத்தில் உள்ள கடுகஸ்தோட்டை மற்றும் வட்டவளை வைத்தியசாலைகளில் கொலஸ்ட்ரால் மற்றும் குளுக்கோஸ் பரிசோதனைக்கு கொலஸ்ட்ரால் பட்டைகள் (strips) மற்றும் குளுக்கோஸ் பட்டைகள் போதுமானதாக இருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | தேவையானதை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | DLI-3 | வடமேல் மாகாணத்திலுள்ள சதலங்கவ, கொகரெல்ல, தங்கொட்டுவ மற்றும் மாதம்பை வைத்தியசாலைகளிலும் மத்திய மாகாணத்தில் உள்ள கடுகன்னாவ, கடுகஸ்தோட்டை, நாலந்த, வட்டவளை வைத்தியசாலைகளிலும் போதியளவு பயிற்சி பெற்ற வைத்திய அதிகாரிகள் மற்றும் பொது சுகாதார தாதி உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | போதியளவு பதவியணியினரை நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | DLI-4 | கடுகன்னாவ வைத்தியசாலை மற்றும் வட்டவளை வைத்தியசாலையில் Serum creatinine பரிசோதனை மற்றும் கொழுப்பு (Lipid Profile) பரிசோதனைக்கான ஆய்வுகூட வசதிகள் காணப்படாதமை அவதானிக்கப்பட்டதுடன் ஏனைய ஏதாவது பொது வைத்தியசாலை அல்லது தனியார் ஆய்வுகூடங்களிலிருந்தேனும் இவ் வசதிகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எதனையும் அவர்கள் எடுத்திருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | இணங்கியவாறு ஆய்வுகூட சேவைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 செயற்திட்ட நோக்கங்களிற்கு அப்பால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நாட்டின் தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் உயர் ஆபத்தைக் கொண்ட சனத்தொகை குழுக்களில் உள்ள தொற்றா நோய்களை கண்டறிந்து முகாமை செய்வது தொடர்பான வலியுறுத்தலுடன் கூடிய ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவைகளின் பயன்பாடு மற்றும் தரத்தினை அதிகரிப்பதே செயற்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். எனினும், மேற்படி நோக்கத்திற்கு முரணாக, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான சுகாதார அமைச்சின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் குறுந்தகடுகளை (CDs) அச்சிடுவதற்கும் பிரதியெடுப்பதற்கும் இந்த செயற்திட்டம் ரூபா 1.2 மில்லியனை செலவிட்டிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | செயற்திட்ட நோக்கங்களின் பிரகாரம் ஒதுக்கீட்டை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் பயிற்சி திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் கூறு 02 இன் கீழ் அமுல்ப்படுத்தப்பட வேண்டும். எனினும், தென், வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களால் கூறு 01 இன் கீழ் பயிற்சி திறன் மேம்பாட்டுக்காக ரூபா 34.50 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் ஒதுக்கீட்டை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அறிக்கைகளின் பிரகாரம் மீளாய்வுக் காலப்பகுதியில் I மற்றும் II கூறுகளை உள்ளடக்கிய முழு செயற்திட்டத்திற்கான மொத்த பணவளிப்பு ரூபா 4,488.22 மில்லியனாக காணப்பட்ட போதிலும் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வு காலப்பகுதிக்கான பணவளிப்புக்கள் ரூபா 1,717.80 மில்லியன் ஆக காணப்பட்டது. ரூபா 2,770.42 மில்லியன் வேறுபாட்டிற்கான | பணவளிப்பு நடைமுறையானது 2019 ஆம் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியாண்டிற்காக தொடர்புடைய DLI'S இன் அடைந்துகொள்ளலின் அடிப்படையில், உலக வங்கி பொது திறைசேரிக்கு ரூபா 4,463 மில்லியன் தொகைக்கு சமமான தொகையை வழங்கியுள்ளது. மாகாண | முறையான நிதி பதிவு முறைமை பேணப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| காரணங்கள் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | சபை, உள்ளூராட்சி அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு ஆகிய இரண்டிற்கும் 2,258 மில்லியன் தொகையை மாத்திரமே தேசிய பாதீட்டு திணைக்களம் ஒதுகக்கீடு செய்திருந்தது. | |

**3.5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| செயற்திட்டச் செலவினத்தை காட்டுவதற்கு செயற்திட்டம் சரியான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருக்கவில்லை. அதற்குப் பதிலாக, excel sheets ஐ பயன்படுத்தி சுகாதாரத் துறையிலுள்ள பல்வேறு பிரிவுகளில் இருந்து சேகரிக்கப்பட்ட உறுதிச்சீட்டுக்களின் அடிப்படையில் memorandum கணக்குகள் தயாரிக்கப்பட்டன. | கருத்துரை வழங்கப்படவில்லை. | முறையான கொடுக்கல்வாங்கல் பதிவு முறைமை நிறுவப்பட்டு பேணப்பட வேண்டும். |